4. அறிவிப்புகள்

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகள், ஏனைய தாள்கள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான திருத்தங்கள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக தலா 1 முதல் 100 வரையிலான வினாக்கள்-விடைகளை உள்ளடக்கிய 2020 ஆம் ஆண்டிற்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல்களில், உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம்* (Soft copy) PDF *முறையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகளின் நகல்கள், சம்பந்தப்பட்ட சட்டமன்றஉறுப்பினர்களுக்குஅனுப்பிவைக்கப்பெறும்என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018-2020 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 91 முதல் 104 வரையிலான 14 அறிக்கைகள்; பொது நிறுவனங்கள் குழுவின் 94 முதல் 103 வரையிலான 10 அறிக்கைகள்; சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 7-வது அறிக்கை; அரசு உறுதிமொழிக் குழுவின் 75 மற்றும் 76-வது அறிக்கைகள் மற்றும் மனுக்கள் குழுவின் 7 முதல் 12 வரையிலான 6 அறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2020 ஜனவரி 9

மேலும், இன்றைய (9–1–2020) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள 2 அறிவிக்கைகள், 5 ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள் ஒன்று ஆகியவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்ட உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்கள்,குழுக்களின் அறிக்கைகள்,பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள், ஏனைய தாள்கள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான திருத்தங்கள் ஆகியவற்றின் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11–30

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 91 முதல் 104 வரையிலான 14 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.